# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில்அருகில்), எல்டாம்ஸ்ரோடுசந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை 600 018. தொலைபேசி எண்: 24347590**

**<u>ஆணை நாள் – 09.02.2015</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,
## மாநில தகவல் ஆணையர்

**<u>வழக்கு எண். 2630 & 2631/F/2014</u>**

திரு. ஆ.இராதாகிருஷ்ணன்,
த/பெ. மா.ஆறுமுகம்,
43, திலகர் நகர்,
அனுப்பர்பாளையம் அஞ்சல்,
திருப்பூர்–641 652. .. மேல்முறையீட்டாளர்

பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர்,
(பகிர்மானம்), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மானக் கழகம், திருப்பூர் மின் பகிர்மான
வட்டம், அவினாசி–641 654,
திருப்பூர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

*****

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று (09.02.2015) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு. ஆ.இராதாகிருஷ்ணன் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012, விதி–7.ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் 04.02.2015ஆம் நாளிட்டு ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ள கடிதத்தில் தனது உடல்நலக் குறைவு காரணமாக இன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை எனவும், ஆவணங்களின் அடிப்படையில் வழக்கை விசாரிக்குமாறும்

கோரியிருக்கிறார். அதனை ஆணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு.எம்.தசரதன், செயற்பொறியாளர் (பகிர்மானம்), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், அவிநாசி, திருப்பூர் மாவட்டம் ஆஜரானார்.

3. மேல்முறையீட்டாளர், 17.01.2014 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.02.2015) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மேல்முறையீட்டாளர் 25.09.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 05.11.2013 அன்று சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

4. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் மின் இணைப்பு எண் 03168006118 கதவு எண்.116, பெரியார் காலனி, அனுப்பர்பாளையம் அஞ்சல், திருப்பூர் என்னும் முகவரியில் உள்ள வீட்டுக்கு உதவி பொறியாளர், கோயம்புத்தூர் ஹவுசிங் யூனிட் (AE/CHU) அவர்கள் பெயரில் கொடுக்கப்பட்டு, பின்பு அவர் பெயரிலிருந்து ஆர்.கோவிந்தம்மாள் என்பவர் பெயருக்கு 22.10.2009ஆம் தேதி பெயர் மாறுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், மின் இணைப்பு பெற உதவி பொறியாளர், கோயம்புத்தூர் ஹவுசிங் யூனிட் (AE/CHU) அவர்கள் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களின் பட்டியல் உள்ளிட்ட 24 இனங்களுக்கான தகவல்களைக் கேட்டிருக்கிறார். பொதுத் தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் தனது 24.10.2013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக இனம்–1 முதல் 6, இனம்–7, இனம்–8 மற்றும் இனம்–15 முதல் இனம்–22 வரையான கேள்விகளுக்கு எந்த வித ஆவணங்களும் அலுவலகத்தில் தேடியும் கிடைக்கப்பெறவில்லை எனவும், மீதமுள்ள இனங்களுக்கு 55 பக்கங்களுக்கு ஆவணங்கள் உள்ளதாகவும், ஒரு பக்கத்திற்கு இரண்டு ரூபாய் வீதம் ரூ.110–/ஐ செலுத்தி, ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்திருக்கிறார். ஆனால், மனுதாரர் உரிய கட்டணத்தை செலுத்தாமல், முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தனது முதல் மேல்முறையீட்டை அனுப்பி வைத்திருக்கிறார். மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் தனது 17.12.2013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக கேள்வி எண். 1 முதல் 6, 8 முதல் 11, 15 முதல் 19 மற்றும் 21 முதல் 24 வரைக்கான விவரங்கள் அனைத்தும் ஆர்.கே.நகர் மற்றும் வெங்கமேடு பிரிவு அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், அலுவலகம் இரண்டு முறை இடமாற்றம் செய்யப்பட்டதால், ஆவணங்களைத் தேடியும் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்து, இனங்கள் 7, 12, 13, 14, 20 ஆகியவற்றிற்கான தகவல்களை அளித்திருக்கிறார்.

5. இது ஒருபுறம் இருக்க, இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன மின் இணைப்பு தொடர்பாக மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ள ஒரு சில இனங்களுக்கான ஆவணங்கள் எதுவும் பிரிவு அலுவலகம் மற்றும் வருவாய் கோட்ட அலுவலகம் ஆகியவற்றில் தேடிப்பார்த்தும் கிடைக்கப் பெறவில்லை எனவும், கிடைக்கப் பெற்ற ஆவணங்கள் அனைத்தும் சான்றிட்டு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கிறார். மேலும், மூன்றாம் நபருக்கு சொந்தமான மின் இணைப்பு எண் தொடர்பான ஆவணங்களை மனுதாரர் கேட்கும் நோக்கம் மற்றும் அவர் தனது மேல்முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு எவ்வித முகாந்திரமும் இருப்பதாகக் கருத முடியவில்லை எனவும் தெரிவிக்கிறார்.

6. இந்த வழக்கில் உள்ள ஆவணங்களை உற்று நோக்கும் போது, மனுதாரர் கோரியிருக்கின்ற தகவல்கள் அனைத்தும் மூன்றாம் நபர் தொடர்பான தகவல்கள். அவர் கேட்டிருக்கின்ற தகவல்களைக் கூர்ந்து நோக்கும் போது, அந்தத் தகவலுக்கும் அவருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது மட்டுமல்லாமல் எவ்வித பொதுநல நோக்கமும் இல்லை என்பதும் ஆவணங்களின் வாயிலாகத் தெரிய வருகிறது. சம்பந்தப்பட்ட மூன்றாம் நபர் ஆட்சேபணை தெரிவித்திருந்தும், அந்தத் தகவல்களை எல்லாம், பொதுத் தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் தாத்பர்யங்களைப் புரிந்து கொள்ளாமல் வழங்கியிருப்பது வருந்தத்தக்கதாகும். பொதுத் தகவல் அலுவலர், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் பல்வேறு வகைமுறைகளைச் சரிவரப் புரிந்து கொண்டு, அந்த வகைமுறைகளைப் பின்பற்றி, மனுக்களை பரிசீலனை செய்யவேண்டியது, சட்டத்தின்பாற்பட்ட கட்டாயக் கடமையாகும்.

7. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 11ஐப் பொறுத்தவரை, பொதுத் தகவல் அலுவலர் மூன்றாம் நபர் சம்பந்தப்பட்ட தகவலை வழங்கக் கருதினால், மனு பெறப்பட்ட ஐந்து தினங்களுக்குள், அந்த மூன்றாம் நபருக்கு, அவருடைய கருத்துக்களைக் கேட்பதற்காக ஒரு வாய்ப்பை வழங்கும்பொருட்டு, அறிவிப்பாணை அனுப்ப வேண்டும். அவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள், மூன்றாம் நபர், பொதுத் தகவல் அலுவலரிடம் ஏன் அந்தத் தகவல்களை வழங்கக்கூடாது என்பதற்கான ஆட்சேபணையை விளக்கும்பொருட்டு, அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அந்த மூன்றாம் நபர் முன்னிடுகின்ற ஆட்சேபணையைப் பொதுத் தகவல் அலுவலர் கருத்தில் கொண்டு, அந்த ஆட்சேபணைகள் ஏற்கக்கூடியவையா, இல்லையா என்று பரிசீலனை செய்து, பரிசீலனைக்குப் பிறகு, அந்த ஆட்சேபணைகள் ஏற்கக்கூடியது என்று பொதுத் தகவல் அலுவலர் கருதும் நிலையில், அந்தத் தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு வழங்க மறுத்துவிடலாம். அதேபோன்று, ஆட்சேபணைகள் ஏற்கத்தக்கது அல்ல என்ற ஒரு முடிவை பொதுத் தகவல் அலுவலர் எடுப்பாரேயானால், அந்தத் தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு வழங்கிவிடலாம். அதற்கு முன்பு பொதுத் தகவல் அலுவலர், தகவல் பெறும் உரிமைச் சட்டம்,2005,

பிரிவு–6ன் கீழ் பெறப்பட்ட மனுவினை, 40 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட மூன்றாம் நபருக்கு, அவருடைய ஆட்சேபணையைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில், அவரைப் பற்றிய தகவலை வழங்கலாமா அல்லது கூடாதா என்ற பொதுத் தகவல் அலுவலரின் முடிவை எழுத்து மூலமாக அந்த மூன்றாம் நபருக்குத் தெரிவிக்க வேண்டும். பொதுத் தகவல் அலுவலர், மூன்றாம் நபர் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு, எடுத்த முடிவினை எதிர்த்து, சம்பந்தப்பட்ட அந்த மூன்றாம் நபருக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 19ன் கீழ் மேல்முறையீடு செய்வதற்கு உரிமை உண்டு. இத்தகைய அதிகாரத்தை பெற்றிருக்கும் பொதுத் தகவல் அலுவலர், ஒரு நீதிபதியின் அணுகுமுறையைக் கடைபிடிக்கவேண்டுமென்பது சட்டத்தின் எதிர்பார்ப்பு. இந்த நடைமுறை பின்பற்றப்படாத நிலையை இந்த வழக்கில் நான் காண்கின்றேன். இனிவருங்காலங்களில் விசாரணைக்கு வந்திருக்கும் பொதுத் தகவல் அலுவலர் போன்று, மின்வாரியத்தில் பணிபுரியும் அனைத்துப் பொதுத் தகவல் அலுவலர்களும் சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளை நன்கு புரிந்து கொண்டு, அந்த நடைமுறைகளிலிருந்து சிறிதும் பிறழாமல் தகவல்களை வழங்கவேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. இந்த வழக்கைப் பொறுத்தவரை, மூன்றாம் நபர் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட தகவல்களை மனுதாரருக்கு தகவல்களை வழங்குவதற்கு முன்னர், அவர் கேட்கின்ற தகவல்களை வழங்கலாமா அல்லது கூடாதா என பொது அதிகார அமைப்பினர் சிறிதும் ஆராயாமல் தகவல்களை தந்திருக்கின்றனர். இது ஏற்கத்தக்கது அல்ல. மேல்முறையீட்டாளர் அரசு அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாமல் திசை திருப்பும் வகையிலும் அரசு அதிகாரிகள் தனது கடமைகளை செய்ய இயலாதவாறு பணியினை திசை திருப்பும் வகையிலும் பல்வேறு தகவல்களை கோரியிருப்பதும், அதில் சில தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் வழங்கியிருப்பதும் துரதிருஷ்டவசமான ஒன்றாகும். மனுதாரரின் கோரிக்கையில் எந்தவித பொதுநலனும் உள்ளதா என்பதை கண்டறிய பொதுத் தகவல் அலுவலர் தவறிவிட்டார். மனுதாரர் தனக்கு சம்பந்தமேயில்லாத மூன்றாமவரின் தனிப்பட்ட தகவல்களையெல்லாம் கேட்டு, பொது அதிகார அமைப்பினரை பணி செய்யவிடாமல் முடக்க முயற்சிப்பது போன்ற நடவடிக்கையில் இனி ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார். **இந்த வழக்கைப் பொறுத்தவரை, மனுதாரருக்கு அவர் கோரிய மின் இணைப்பைப் பொறுத்த தகவல்களை பொது அதிகார அமைப்பினர் வழங்கத் தேவையில்லை என இந்த ஆணையம் உத்தரவிடுகிறது.**

9. மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்கள் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்திருப்பது ஏற்கத்தக்கது அல்ல எனவும் இந்த ஆணையம் கருதுகிறது. இந்நிலையில் இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன:-

1. பொதுத் தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் இன்றைய விசாரணையின் போது, மின் இணைப்பு வழங்கியதற்கான ஆவணங்கள் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவிக்கும் காரணத்தால், தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு–18(3)(b)யின்படி, மேற்பார்வைப் பொறியாளர், திருப்பூர் மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், திருப்பூர் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு நேரில் சென்று, உரிய ஆவணங்களை ஆய்வு செய்து, எந்த ஆதாரத்தின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டது என்பதற்கான ஆவணங்களை தேடிக் கண்டுபிடித்து, ஆவணம் கிடைக்கப் பெற்ற விவரத்தை இந்த ஆணையத்திற்கு முப்பது தினங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.
2. மேற்குறித்த ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லையெனில், அது அழிக்கப்பட்டதா? அல்லது காணாமல் போனதா? அவ்வாறு காணாமல் போகச் செய்திருந்தால், எவ்வாறு காணாமல் போனது? அதற்குக் காரணமானவர்கள் யார்? யார்? என்பதைக் கண்டறிந்து அது குறித்த ஓர் அறிக்கையையும், அதற்கு எந்தெந்த அதிகாரிகள் பொறுப்பாவார்கள், அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை பற்றிய விவர அறிக்கையையும், மின் இணைப்புகள் சட்டத்திற்குப் புறம்பாக வழங்கப்பட்டிருந்தால், அவ்வாறு வழங்கக் காரணமாக இருந்தவர்கள் மீது ஏன் குற்ற நடவடிக்கை தொடரப்படவில்லை என்பதற்கான விளக்கத்தை, தமிழ்நாடு மின்சார வாரிய சட்டப் பிரிவின் (Legal Section) உதவியுடன், உரிய முறையில் ஓர் பிரமான வாக்குமூலமாகத் (sworn affidavit) தயார் செய்து, இவ்வாணையத்திற்கு முப்பது தினங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு மேற்பார்வைப் பொறியாளர், திருப்பூர் மின் பகிர்மான வட்டம், திருப்பூர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.
3. சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேற்குறித்த மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தால், அவர்கள் பணி ஓய்வு பெற்றிருக்கும் பட்சத்தில், அவர்கள் மீது தொடரப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் (ஓய்வூதியப் பிடித்தம் அல்லது குற்ற நடவடிக்கை) ஒரு விரிவான அறிக்கையை இவ்வாணையத்திற்கு அளிக்கவேண்டுமென்றும், மேற்பார்வைப் பொறியாளர், திருப்பூர் மின் பகிர்மான வட்டம், திருப்பூர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

10. புதிதாக வனையப்பட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு) விதிகள், 2012, விதி 7–ன்படி, மனுதாரர் இவ்வாணையத்தின் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயத் தேவை. அழைப்பாணை அனுப்பியும் மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. தான் விசாரணைக்கு ஆஜராகாததற்கான காரணங்களை விளக்கி விசாரணை தேதிக்கு முன்பாக இவ்வாணையத்திற்குக் கடிதம் மட்டுமே தாக்கல் செய்திருக்கிறார். இனி வருங்காலங்களில், ஆணையத்திலிருந்து விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்படும்போது, விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்று மேல்முறையீட்டாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

**ஒம்/– (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 2630 & 2631/F/2014</u>**

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர்,
(பகிர்மானம்), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம், அவினாசி–641 654,
திருப்பூர் மாவட்டம்.

மேல்முறையீட்டு அலுவலர் மற்றும்
மேற்பார்வைப் பொறியாளர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
திருப்பூர்.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு. ஆ.இராதாகிருஷ்ணன்,
த/பெ. மா.ஆறுமுகம்,
43, திலகர் நகர்,
அனுப்பர்பாளையம் அஞ்சல்,
திருப்பூர்–641 652.

*jb*